## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

### பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2017/2018

### உள்ளூர் பல்கலைக்கழகங்களுக்கு விளையாட்டுக்களில் தனிச் சிறப்பு வாய்ந்த திறமைகளை / திறன்களைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான விஷேட உள்ளெடுப்பிலான பல்கலைக்கழக அனுமதி

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தினால் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் மற்றும் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உடற்றொழில் கல்வி ஆகிய பட்ட பாடநெறிகளைத் தொடர்வதற்காக விளையாட்டுத் துறையில் தமது திறமையினை வெளிப்படுத்திய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வரவேற்கிறது.

**விஷேட அனுமதிக்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகள்:**

- ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றிருத்தல் அல்லது பங்கு பற்றி இருத்தல்.
- பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அல்லது 'சார்க்' விளையாட்டுப் போட்டிகளில் குறைந்தது தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கங்களைப் வென்றிருத்தல்.
- பொதுநலவாய விளையாட்டுக்கள், ஆசிய விளையாட்டுக்கள், சார்க் விளையாட்டுக்கள் ஆகியவற்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட உலகக் கிண்ணத்திற்கான கிரிக்கெட், காற்பந்தாட்டம், றகர், கூடைப்பந்து மற்றும் கரப்பந்தாட்டம் அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்ட விளையாட்டில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தும் தேசிய அணிகளில் அங்கத்தவராக இருத்தல்.

இவ் விஷேட அனுமதியின் கீழ் குறித்த கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், உரிய கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு முன்பு, கட்டாயமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்படும் ஒரு வருட காலத்துக்கான அடிப்படைக் கற்கைநெறியைத் தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுவார்கள்.

மேற்கூறிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து 2018 **ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி** வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பின்வரும் மாதிரியில் உள்ளவாறு நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தை சம்பந்தப்பட்ட சான்றுப் பத்திரங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் இணைத்து 2018 **ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி** அன்று அல்லது அதற்கு முன்பாக மேலதிகச் செயலாளர் (கல்விசார் அலுவல்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வோட் பிளேஸ், கொழும்பு 07 என்ற விலாசத்திற்கு முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி 2018 **ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி** ஆகும்.

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்களும், உரியவாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

இல. 20, வோட் பிளேஸ்,
கொழும்பு 07.
12-07-2018

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

**விளையாட்டுக்களில் தனிச்சிறப்பு வாய்ந்த திறமைகளுடனான / திறன்களுடனான விண்ணப்பதாரிகளுக்கு**

**பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம் - கல்வியாண்டு 2017/2018**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ……………………………………………..
   முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் : ……………………………………………..
   முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ……………………………………………..
   ……………………………………………..

2. நிரந்தர முகவரி : ……………………………………………...
   ……………………………………………...

3. பிறந்த திகதி : …………………… வயது: ……………..

4. தேசியம் : …………………… பால்: ………………

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

6. தொலைபேசி இலக்கம் : (நிலையான)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(கையடக்க)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. கல்விசார் தகைமைகள் : ……………………………………………...

**க.பொ.த. (சா/த.)**

**சுட்டெண்: ………………………  ஆண்டு: ………………………**

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

**க.பொ.த. (உ/த.)**

**சுட்டெண்: ………………………  ஆண்டு: ………………………**

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

8. விளையாட்டுத் துறையில் தகுதிகள்: (சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்)

| ஆண்டு | பங்குபற்றிய விளையாட்டு / நிகழ்ச்சி | நடைபெற்ற நாடு | பெற்ற இடம் / பதக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

9. நீங்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டால் தொடர விரும்பும் கற்கை நெறிகளின் ஒழுங்கு முறையைக் குறிப்பிடவும். (விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் மற்றும் உடற்றொழில் கல்வி ஆகிய கற்கை நெறிகள் மட்டும்)

01. 

02. 

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும் இத்தால் உறுதியளிக்கின்றேன். மேலும், இவ்விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனக் கண்டறியப்பட்டால் எனது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் அல்லது குறித்த கற்கைநெறிக்கு தகுதியற்றவராக கருதப்பட்டு சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்திலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் எழுத்துமூல அரசியலமைப்பினாலும், சட்டங்களினாலும், விதிகளினாலும் மற்றும் ஒழுங்கு விதிகளினாலும் நான் கட்டுப்படுவேன் என்றும், சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர்களையும், மற்றும் உத்தியோகத்தர்களையும் நோக்கி ஒழுக்கத்துடன் நடப்பேன் என்றும், சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தின் பெயரைக் களங்கப்படுத்தும் விதமாக நடக்கமாட்டேன் என்றும் இத்தால் நான் உறுதி மொழியளிக்கின்றேன்.

திகதி: …………………….

……………………………………….

விண்ணப்பதாரியின் கையொப்பம்